**உலர் வலய நகர்ப்புற நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் 2477 எஸ்ஆர்ஐ / 2977 – எஸ்ஆர்ஐ, மானிய இலக்கம். 0129/130 எஸ்ஆர்ஐ) - 2014**

---

உலர் வலய நகர்ப்புற நீர் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையேயான 2009 ஜுன் 29 ஆந் திகதிய 2477 எஸ்ஆர்ஐ(எஸ்எவ்), மானிய இலக்கம் 0129/0130 எஸ்ஆர்ஐ(எஸ்எவ்), மற்றும் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2977 – எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) செயற்திட்ட உடன்படிக்கையின் ஐஐ ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்பிரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளிப்பு, மற்றும் காலம்

---

செயற்திட்டக் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் அமைச்சும் தற்போதைய நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் அமைச்சு நிறைவேற்று முகவர் ஆகும். செயற்திட்ட அமுலாக்கல் முகவர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகும். வட மாகாணத்தின் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் மற்றும் வடமேல் மாகாணத்தின் புத்தள மாவட்டம், சிலாபம் என்பவற்றை உள்ளடக்கிய இலங்கையின் வடமேல் உலர் வலயத்தில் உள்ள நகர்ப்புற மக்களது பௌதிக நலனை முன்னேற்றமடையச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மீளாய்வு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,165 மில்லியனுக்கு நிகரான 163.33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். அதில் ரூபா 11,809 மில்லியனுக்கு நிகரான 99.78 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 61.09 சதவீதத்தை கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டதுடன் ரூபா 2,649 மில்லியனுக்கு நிகரான 23.22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 14.22 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தியின் மானியமாக வழங்குவதற்கும் உடன்பட்டிருந்தது. ரூபா 228 மில்லியனுக்கு நிகரான 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 1.22 சதவீதத்தை நீர்க்கான நிதியளிப்பு பங்குதாரர் வசதியாக நெதர்லாந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியததிலிருந்து (என்டீஎவ்) மானியமாக வழங்குவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டது. எஞ்சிய மீதமாகவுள்ள ரூபா 4,479 மில்லியனுக்கு நிகரான 38.33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது 23.47 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படுவதற்கும் உடன்பாடாகியது. 2009 நவம்பர் 13 ஆந் திகதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2013 ஜுன் 30 ஆந் திகதியளவில் அதனை முடிவு செய்திருந்தது. அதனையடுத்து, செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் 2012 டிசெம்பர் 18 ஆந் திகதியன்று 50 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கப்பட்டது. சிவில் வேலைப் பொருட்களுக்கான தேவைகளும் உபகரணங்களும் அதிகரித்தமையே இதற்கான காரணமாகும். மேலதிகக் கிரயத்திற்கான விரிவான வடிவமைப்பின் போது ரூபா 4,988 மில்லியனுக்குச் சமனான 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் எஞ்சிய ரூபா 1,247 மில்லியனுக்குச் சமனான 10 மில்லியன் இலங்கை அரசாங்கத்தாலும் நிதியளிக்கப்படவிருந்தன. செயற்திட்ட முடிவுத் திகதியும் 2016 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிசார்கூற்றுக்கள்

------------------------

### 2.1 அபிப்பிராயம்

-------------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களை தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்திடமிருந்து பெற்ற பணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட தொகை ரூபா 26,817,487 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக் கட்டணமாக கடனிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கியால் அறவீடு செய்த ரூபா 33,083,958 நிதிசார் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இனங்காமை

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியனுக்குக் குறையாத ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்கும் ஒப்பந்தகாரர் பொது ஒப்பந்தப் பதிவுகாரரிடம் தம்மைப்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டு 60 நாட்களுக்குள் கேள்வி உடன்படிக்கையானது பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் பதிவு செய்யப்படவும் வேண்டும். எவ்வாறாயினும், இச் செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர் இதற்கிணங்க நடந்துகொள்ளவில்லை.

### 2.2.3 செயற்திட்டத் தேவைகளுக்கல்லாதவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட நிதி

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இரு ஊழியர்களுக்கு செயற்திட்டத்தால் 2014 டிசெம்பர் 31 வரை ரூபா 2,085,636 ஊதியமாக வழங்கப்பட்டிருந்தது.

### 2.2.4 முன்னைய கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட போதும் தீர்க்கப்படாத விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உறுதிச் சான்றுகளும் தொடர்புடைய ஆவணங்களும் கிடைக்காமையால் 2008 ஆம் ஆண்டின் போது இலங்கை அரசாங்க நிதியிலிருந்து செலவாகிய ரூபா 7.8 மில்லியனைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை இந் நிலமையானது எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்ட போதும், மீளாய்வாண்டிலும் இவை சமர்ப்பிக்கப்படாது இருந்தன.

(ஆ) இலங்கை அரசாங்க நிதியிலிருந்து ரூபா 12,213,794 நிர்மாண உபகரணங்கள், பொருட்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு 2009 முதல் 2013 வரை பயன்படுத்தப்பட்டிருந்த போதும், கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 57 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 3. நிதிகள் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிலும் 2014 டிசெம்பர் 31 வரையிலுமான நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடு நிதிப்பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன்/ மானிய உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு ஒத்துக்கொண்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்டத்தின் மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | நிதிப் பயன்பாடு 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் மில்லியன | அமெரிக்க டொலர் மில்லியன | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆஅவ – கடன் | | | | | | | |
| 2477 | 59.78 | 6,820 | | 13.87 | 1803 | 25.23 | 3281 |
| 2977 | 40.00 | 4,989 | 2,345 | 6.52 | 6.52 | 6.80 | 888 |
| உப மொத்தம் | 99.78 | 11,809 | | 20.39 | 2,651 | 32.03 | 4,169 |
| ஆஅவ மானியம் | | | | | | | |
| 129 | 23.22 | 2,649 | | 4.70 | 613 | 10.33 | 1343 |
| 130 | 2.00 | 228 | 650 | 0.26 | 34 | 1.45 | 189 |
| உப மொத்தம் | 25.22 | 2,877 | | 4.96 | 647 | 11.78 | 1,532 |
| இஅ - உப மொத்தம் | 38.33 | 4,479 | 680 | 5.00 | 650 | 12.66 | 1,656 |
| நிகர மொத்தம் | 163.33 | 19,165 | 3,675 | 30.35 | 3,948 | 56.47 | 7,357 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதிர்பார்த்த இலக்கை நிறைவேற்றுவதற்கு 2013 ஜீன் 30 வரை உள்ளவாறு செயற்திட்டம் மதிப்பீடு செய்த மொத்தக் கிரயம் 113.33 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும், நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் நிலவிய குறைவான செயலாற்றல் மற்றும் முறையற்ற கிரய மதிப்பீடு என்பன காரணமாக அது ரூபா 163.33 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மீளாய்வு செய்யப்பட வேண்டியதாயிற்று இதே இலக்குகளை எய்துவதற்கு ஆரம்ப மொத்தக் கிரயம் 44 சதவீத அதிகரிப்பிற்குள்ளானது.

(ஆ) வடமாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் நான்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுலாக்க ரூபா 6,236 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும், WTP/C&P/04A ஒப்பந்தம் நிறைவேறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ரூபா 1.105 மில்லியன் WTP/C&P/04B பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட முடியாது இருந்தன. ஆகவே, WTP/C&P/04B ஒப்பந்தம் செயற்திட்டக் காலத்திற்குள் நிறைவேற்றுவதானது கணக்காய்வில் ஐயத்திடமாகியுள்ளது.

## 3.2 பௌதிக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலாண்டு ரீதியில் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளைக் காட்டக் கூடியவாறு செயற்திட்டத்தின் மொத்தக் காலப்பகுதியையும் உள்ளடக்கிய விரிவான செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அத் திட்டத்திற்கு ஏற்ப அவ்வப்போது முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாற்றங்கள் இனங்காணப்பட்டு திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவாறு அது அமையவில்லை. ஆகவே, திட்டமானது செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கான ஆக்கபூர்வ கட்டுப்பாட்டுச் சாதனமாகத் தோற்றவில்லை.

(ஆ) 2016 ஜுன் 30 ஆந் திகதியளவில் செயற்திட்டம் முடிவுறவிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் முறையே 63 சதவீதம் மற்றும் 35 சதவீதம் என இருந்தன. எவ்வாறாயினும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் காலப்பகுதியின் 78 சதவீதம் நிறைவடைந்திருந்தது.

## 3.3 சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதீக முன்னேற்ற விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பிரதேச செயலகம் | இலக்கு (எண்ணிக்கை) | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தப் பெற்றவை (எண்ணிக்கை) | சதவீதம் | நிதிசார் கூற்றுக்களின் பிரகாரமான கிரயம் ரூபா |
|---|---|---|---|---|
| சிலாபம் | 500 | 335 | 67 | 8,015,429 |
| புத்தளம் | 500 | 390 | 78 | 9,287,050 |
| மன்னார் | 330 | 297 | 87 | 6,711,250 |
| வவுனியா | 500 | 199 | 35 | 3,389,750 |
| கூட்டு மொத்தம் | 1.830 | 1221 | 64 | 27,403,479 |

செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் (செநிகை) 1,830 குடும்பங்களுக்குச் சுகாதார வசதிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 66 சதவீதத்தைக் பிரதிநிதித்துவப்படுத்தும் 1,221 குடும்பங்களுக்கே வசதிகள் வழங்கியிருந்தன. சுகாதார நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்ட மானியம் அதன் வருடாந்த அமைப்பு போன்ற தகவல்கள் வழங்கப்படாமையால் நிதிசார் முன்னேற்றத்தைப் பகுப்பாய்வு செய்ய முடியாது இருந்தன. எவ்வாறாயினும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,221 சுகாதார வசதிகளை வழங்கச் செலவாகிய தொகை ரூபா 27,403,479 ஆகும். மேற்படி பகுப்பாய்வின் பிரகாரம், ஏனைய பகுதிகளைவிட வவுனியா மாவட்டச் செயலகப் பிரிவானது குறைந்த முன்னேற்றத்தையே காட்டுகின்றது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்த இரு ஒப்பந்த வேலைகளான சிலாபம் நீர் வழங்கல் I ஆம் கட்டத்தின் ஊடுருவல் பிரதான விநியோகத் திட்டத்திற்கு HDDE மற்றும் PVC குழாய்களையும் மற்றும் பொருத்திகளையும் வால்வுகளையும் வழங்கி அவற்றைப் பொருத்துவது (ஒப்பந்த இலக்கம் PIPES/C/8A – முடிவடைந்த திகதி 2014 ஜுன் 06) மற்றும் II ஆம் கட்டத்தின் (ஒப்பந்த இலக்கம் PIPES/S/8B – முடிவடைந்த திகதி 2014 செப்டெம்பர் 22) என்பவற்றுக்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய தலைமை வேலை, புதிய பராமரிப்புப் பொறித்தொகுதி மற்றும் மூலநிர் உட்புகுத்தல் (ஒப்பந்த இலக்கம் WIP/C&P/04A) எனும் பிரதான ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் மூன்று சதவீதமாக இருந்தது.

பிரதான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, முடிவடைந்த ஏனைய இரு செயற்திட்டங்களையும் அவற்றினது குறைபாடுகளுக்கு பொறுப்பான காலப்பகுதி முடிவடையும் முன்னரே பரீசீலிக்க முடியாது இருந்தது. பிரதான ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 2015 ஜுன் 30 இல் உள்ளவாறு 16 சதவீதம் மாத்திரமாக இருந்தது மேலும் அவதானிக்கப்பட்டது.